# பாரதிதாசன் பல்கலைக்கழகம்
**(Accredited with 'A+' Grade by NAAC in the Third Cycle)**
**திருச்சிராப்பள்ளி–620024**

தொலைபேசி: **0431- 2407016 / 2407060**
தொலை நகலி: **0431-2407444**

முனைவர் பா. ஜெய்பிரகாஷ், எம்.எல்.ஐ.எஸ்ஸி., எம்.பில், பிஎச்.டி., மின்னஞ்சல்: **coe@bdu.ac.in**
தேர்வு நெறியாளர் (பொ) பி.எச்.டி., இணையதளம்: **www.bdu.ac.in**


---

இ.நி/தே.பி/பட்டயம்/ சான்றிதழ்/ ஏப்ரல்-2026 தேர்வு/ தேதி: 04.03.2026

பெறுநர்

1. முதல்வர் அவர்கள்,
   பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்ற தன்னாட்சி பெறாத (Non-Automous) கல்லூரிகள்.
2. முதல்வர் / நிறுவனங்கள் /மருத்துவமனைகள் இயக்குநர்கள் அவர்கள்,
   மற்றும் பல்கலைக்கழக இணைவு பெற்ற தன்னாட்சி (Automous) கல்லூரிகள்.

அய்யா/அம்மையீர்,

பொருள்: தேர்வுப் பிரிவு - பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான ஏப்ரல்-2026-ன் பருவ மற்றும் அல்பருவ தேர்வுக்கு மாணாக்கர்களிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்களைப் பெறுவது மற்றும் தேர்வுகள் துவங்கும் நாள் ஆகியவற்றினைத் தெரிவிப்பது - தொடர்பாக.

பார்வை: துணைவேந்தர்குழுவின் அனுமதி ஆணை நாள்: 27.02.2026.

------------

ஏப்ரல்-2026-ல் நடைபெற இருக்கும் பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான பருவ மற்றும் அல்பருவ முறையிலானத் தேர்வுகளுக்கு தங்களது கல்லூரிகள்/நிறுவனங்கள்/ மருத்துவமனைகள் ஆகியவற்றில் பயிலும் மாணாக்கர்களிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள் தேர்வுக் கட்டணத்துடன் காலதாமததொகையின்றி பெறுவதற்கான கடைசி நாள், காலதாமததொகையுடன் சேர்த்து பெறுவதற்கான கடைசி நாள், தேர்வுக்கட்டண விவரங்கள் மற்றும் தேர்வுகள் சம்பந்தமாக தாங்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய விதிமுறைகள் ஆகியவை கீழ்க் குறிப்பிட்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

1. **<u>தேர்வு விண்ணப்பங்கள் காலதாமதத்தொகையின்றியும், காலதாமதத்தொகையுடனும் பெறுவதற்கான கடைசி நாள் மற்றும் எழுத்துத் தேர்வுகள் துவங்கும் நாள்:</u>**

| | | |
|---|---|---|
| பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பப் படிவங்களை மாணாக்கர்களிடமிருந்து காலதாமததொகையின்றி பெறுவதற்கான கடைசி நாள் | 11.03.2026 | புதன்கிழமை |
| பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பப் படிவங்களை மாணாக்கர்களிடமிருந்து ரூ.300/- காலதாமததொகையுடன் சேர்த்து பெறுவதற்கான கடைசி நாள் (18.03.2026 அன்று வரை பெறப்படும் ஒவ்வொரு தேர்வு விண்ணப்பப் படிவத்துடனும் காலதாமததொகை-ரூ.300/- சமர்ப்பிக்க வேண்டும்) | 18.03.2026 | புதன்கிழமை |
| மாணாக்கர்களிடமிருந்து பெற்ற பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பப் படிவங்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட கல்லூரிகள்/ நிறுவனம்/மருத்துவமனை வாயிலாக பல்கலைக்கழக தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் | 23.03.2026 | திங்கள்கிழமை |
| பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான எழுத்துத் தேர்வுகள் துவங்கும் நாள் (எழுத்துத்தேர்வு தொடங்கும் தேதியானது Regular மற்றும் BDU-BDC Off-Campus என இரண்டிற்கும் பொருந்தும்) | தேதி பின்னர் அறிவிக்கப்படும் | |

2. பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான பல்கலைக்கழக தேர்வுக் கட்டண விவரங்கள்:

| S.No | Particulars | 2024-2025 கல்வியாண்டிற்க்கு முன்னர் சேர்க்கை பெற்ற மாணாக்கர்கள் | 2024-2025 கல்வியாண்டில் சேர்க்கை பெற்ற மாணாக்கர்கள் | Practical hrs |
|---|---|---|---|---|
| 1. | தேர்வு விண்ணப்பப் பரிசீலனைக் கட்டணம் | ரூ. 50/- | ரூ. 70/- | ----- |
| 2. | எழுத்துத் தேர்வு - தாள் ஒன்றுக்கு | ரூ. 75/- | ரூ.100/- | ----- |
| 3. | செய்முறைத் தேர்வு - தாள் ஒன்றுக்கு | ரூ.100/- | ரூ.140/- | 3 hrs Practical |
| 4. | பருவ மதிப்பெண் பட்டியல் - ஒன்றுக்கு | ரூ.100/- | ரூ.125/- | ----- |
| 5. | கூட்டு மதிப்பெண்பட்டியல் (1 வருட / 2 வருட படிப்பு) | ரூ.200/- | Oneyear course ரூ.200/-<br>Two years course ரூ.500/-<br>Three years courseரூ.600/- | ----- |
| 6. | தற்காலிகச் சான்றிதழ் | ரூ.200/- | ரூ.350/- | ----- |
| 7. | பட்டமளிப்புச் சான்றிதழ் | ரூ.800/- | ரூ.1000/- | ----- |

3. பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளை பயிற்றுவிக்கும் கல்லூரிகளின் முதல்வர்கள் மற்றும் நிறுவனங்கள்/மருத்துவமனைகளின் இயக்குநர்கள் ஆகியோர் தேர்வு சம்பந்தமாக பின்பற்ற வேண்டிய விதிமுறைகள்:

**அனைத்து மாணாக்கர்களிடமிருந்தும் பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பப் படிவங்களைப் பெற வேண்டும். மாணாக்கர்கள் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் பொழுது நடப்புத்தாள்கள், நிலுவைத்தாள்கள் என எழுத வேண்டிய அனைத்து தேர்வுத்தாள்களையும் கட்டாயம் பதிவு செய்திடல் வேண்டும்.** தேர்வு விண்ணப்பப்படிவங்களுடன் தேர்வுக்கட்டணம் செலுத்தியதற்கான தேர்வுக் கட்டண ரசீதுகளை இணைத்து முதல்வர்கள் மற்றும் இயக்குநர்களின் பரிந்துரைக் கடிதத்துடன் அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் தேதிக்குள் தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் கிடைக்குமாறு அனுப்பிவைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. தேர்வு விண்ணப்பப் படிவங்களை பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து (www.bdu.ac.in) பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்றும், பல்கலைக்கழகத்திற்கு வந்துசேரவேண்டிய கடைசி நாளுக்குப் பிறகு பெறப்படும் தேர்வு விண்ணப்ப படிவங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவல்களை மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் சுற்றறிக்கை வாயிலாகவும், அறிவிப்புப் பலகையிலும் வெளியிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஏப்ரல்-2026-ஐ இறுதி பருவமாகக் கொண்டு தேர்வு எழுதும் பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்பு மாணாக்கர்கள் அனைவரும் வரிசை எண் 6,7-ல் குறிப்பிட்டுள்ள தொகையை தேர்வு கட்டணத்துடன் அவசியம் செலுத்த வேண்டும். பட்டயம்/சான்றிதழ் படிப்பிற்கான தேர்வுக்கட்டணங்களை இளநிலை மற்றும் முதுநிலை தேர்வுக்கட்டணங்களுடன் இணைக்காமல் தனியாக செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஏப்ரல்-2026 தேர்வை முதல் பருவமாக கொண்டு தேர்வு எழுதிட இருக்கும் பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்பு மாணாக்கர்கள் அனைவரும் தங்களுடைய பெயர் மற்றும் பிறந்த தேதியை +2 மதிப்பெண் பட்டியலில் உள்ளவாறு தேர்வு விண்ணப்பப் படிவத்தில் பூர்த்தி செய்வதுடன் தங்களுடைய கைப்பேசி எண் (Cell Number), விலாசம் (Address), பாடக்குறியீடுகள் (Subject Codes), பாடத்தலைப்புகள் (Subject Titles) ஆகியவற்றினையும் பிழைகள் ஏற்படாதவாறு பூர்த்தி செய்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**மேலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் கோரப்பட்டுள்ள விபரங்களை சரியாக பூர்த்திசெய்து கட்டாயம் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புமாறும் மற்றும் விபரங்களை Excel File-ல் Format-ஐ மாற்றம் செய்யாமல் பதிவேற்றம் செய்து diploma@bdu.ac.in என்ற மின்அஞ்சலில் அனுப்புமாறும் நிறுவனங்கள்/மருத்துவமனைகளின் இயக்குநர்களிடம் கேட்டுக்கொள்ளப்படுகிறது. (படிவம் இணைக்கப்பட்டுள்ளது)**

தேர்வு எழுத இருக்கும் மாணாக்கர்களது வருகைப்பதிவுச் சான்றிதழ்களுடனும், தங்களது கல்லூரி/நிறுவனம்/மருத்துவமனையில் பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கு அந்தந்த கல்வியாண்டுகளில் அனுமதிக்கப்பட்ட பாடப்பிரிவுகள், பாடப்பிரிவுகள் குறித்து நீட்டிக்கப்பட்ட கடிதங்கள், அனுமதிக்கப்பட்ட இடங்கள் மற்றும் கூடுதல் இடங்கள் ஆகியவை குறித்து பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட கடித நகல்களையும் இணைத்து அனுப்பிவைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

செய்முறைத் தேர்வுகளை, எழுத்துத் தேர்வுகள் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே நடத்தி முடித்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. செய்முறைத் தேர்வுகள் நடத்திடும் பொருட்டு அதற்கான **செய்முறைத் தேர்வுக் கால அட்டவணையை மூன்று நகல்களாக தயார் செய்து தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பி தேர்வு நெறியாளரின் ஒப்புதல் பெற்ற பிறகே செய்முறைத் தேர்வுகளை நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

ஒரு செய்முறைத்தேர்வில் 10-க்கும் குறைவாக மாணாக்கர்கள் எண்ணிக்கை இருக்குமானால் புறத்தேர்வாளரை சம்பந்தப்பட்ட கல்லூரியின் முதல்வரும், துறைத்தலைவர் மற்றும் இயக்குநர்கள் கலந்தாலோசித்து அருகாமையில் உள்ள பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகள் மற்றும் நிறுவனங்களில் பணியாற்றும் தகுதி பெற்ற துறை ஆசிரியர்களைப் புறத்தேர்வாளர்களாக நியமனம் செய்து செய்முறைத் தேர்வை நடத்தி முடிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. அவ்வாறு நியமனம் செய்யப்பட்டு நடத்தப்பட்ட தகவலை தேர்வு நெறியாளருக்கு கடிதமாக அனுப்பிவைக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒரு செய்முறைத்தேர்வில் 10-க்கும் அதிகமான எண்ணிக்கையில் மாணாக்கர்களது எண்ணிக்கை இருக்குமானால் புறத்தேர்வாளரை பல்கலைக்கழகம் நியமிக்கும் என்றும் அந்நியமன கடிதத்தின் நகல் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும், பல்கலைக்கழகத்தால் நியமனம் செய்யப்பட்ட புறத்தேர்வாளர்கள் தேர்வுப் பணிக்கு வர இயலாத நிலை ஏற்படின், அந்தந்த கல்லூரி முதல்வர்கள், துறைத்தலைவர்கள் மற்றும் இயக்குநர்கள் அருகாமையில் உள்ள பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகள் மற்றும் நிறுவனங்களில் பணியாற்றும் பல்கலைக்கழக பணிமூப்புப் பட்டியலில் உள்ள ஆசிரியர்கள்/தகுதி பெற்ற துறை ஆசிரியர்களைப் புறத்தேர்வாளர்களாக நியமனம் செய்து செய்முறைத் தேர்வை நடத்தி முடிக்க கேட்டுக்கொள்ளலாம். அவ்வாறு புறத்தேர்வாளரை நியமித்து செய்முறைத்தேர்வை நடத்தியிருந்தால் அவருடைய பெயரை குறிப்பிட்டு அதற்கான பின்னேற்பு ஒப்புதல் கடிதம் (Ratification Letter) தேர்வு நெறியாளருக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

செய்முறைத் தேர்வுகளின் அக / புற மதிப்பெண்களையும், (Practical – Internal & External Marks) மற்றும் எழுத்துத் தேர்வின் அக மதிப்பெண்களையும் (Theory - Internal Marks) அக / புறத் தேர்வாளர்கள், துறைத்தலைவர்கள், முதல்வர்கள் மற்றும் இயக்குநர்களின் கையொப்பத்துடன் உரிய நேரத்திற்குள் பல்கலைக்கழக தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இக்கடிதம் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4/3/26

தேர்வு நெறியாளர்(பொ)